**பாடம் - 4**
**தவ்ஹீத் அஸ்மா வஸ்ஸிஃபாத் (தொடர்ச்சி)**

**الدرس الرابع**
**تابع توحيد الأسماء والصفات**

அல்லாஹ்வின் பண்புகளிலிருந்து இதற்கு மற்றொரு உதாரணம், அல்லாஹ் கூறுகிறான்:

﴿وَقَالَتِ الْيَهُودُ يَدُ اللهِ مَغْلُولَةٌ غُلَّتْ أَيْدِيهِمْ وَلُعِنُوا بِمَا قَالُوا بَلْ يَدَاهُ مَبْسُوطَتَانِ يُنْفِقُ كَيْفَ يَشَاءُ﴾ ﴿المائدة:٦٤﴾

அல்லாஹ்வின் கை கட்டப்பட்டுள்ளது என்று யூதர்கள் கூறுகின்றனர். அவர்களின் கைகளே கட்டப் பட்டுள்ளன. இவ்வாறு கூறியதன் காரணமாக அவர்கள் சபிக்கப்பட்டனர். மாறாக அவனது இரு கைகளும் விரிக் கப்பட்டே உள்ளன. அவன் நாடியவாறு வழங்குவான். (5:64)

தாராளமாக வாரி வழங்கக்கூடிய இரு கைகள் தனக்கு இருப்பதாக அல்லாஹ் கூறியுள்ளான். நாமும் அவ்வாறே அருளை அள்ளி வழங்கக் கூடிய இரு கைகள் அல்லாஹ்வுக்கு உள்ளன என்று நம்புவது கடமையாகும். எனினும் நமது உள்ளத்தில் அதற்கொரு வடிவத்தை கற்பனை செய்வதோ, அவ்விரு கைகளும் இன்ன விதத்தில் உள்ளன என்று நாவால் மொழிவதோ, படைப்பினங்களின் கைகளுடன் அவ்விரண்டையும் ஒப்பிடுவதோ கூடாது. ஏனெனில்

﴿لَيْسَ كَمِثْلِهِ شَيْءٌ وَهُوَ السَّمِيعُ الْبَصِيرُ﴾ ﴿الشورى:١١﴾

அவனைப்போல் எதுவுமில்லை. அவன் செவியுறுபவன், பார்ப்பவன் (42:11) என்று அல்லாஹ் கூறுகிறான்.

இந்தத் தவ்ஹீத் பற்றிய சுருக்கமான கருத்து என்ன வெனில் அல்லாஹ்வும் அவனது தூதரும் அல்லாஹ்வுக்கு என்னென்ன பெயர்கள் குணங்கள் இருப்பதாகக் கூறியுள்ளார்களோ அவற்றை மாற்றாமல், மறுக்காமல், உவமைப்படுத்தாமல் எந்த விதத்தில் என விவரிக்காமல் அப்படியே அல்லாஹ்வுக்குக் கொடுப்பதும், என்னென்ன பெயர்கள் குணங்கள் இல்லையெனக் கூறியுள்ளார்களோ அவற்றை அவனுக்குக் கொடுக்காமல் இருப்பதும் நம்மீது கடமையாகும்.

எது விஷயத்தில் அல்லாஹ்வும் அவனது தூதரும் ஒன்றும் சொல்ல வில்லையோ அது விஷயத்தில் நாமும் ஒன்றும் சொல்லாமல் அதற்கு பொருள் கூடக் கூறாமல் அப்படியே விட்டுவிட வேண்டும்.